**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 14-03-2023**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-03-14 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-03-15 | 2023-03-16 | 2023-03-17 | 2023-03-18 | 2023-03-19 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 36.0 | 35.0 | 34.0 | 34.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 21.0 | 21.0 | 21.0 | 20.0 | 20.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 20 | 20 | 30 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4.0 | 6.0 | 6.0 | 4.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 290 | 340 | 360 | 20 | 20 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 0 | 1 | 4 | 3 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

மார்ச் 18,19 தேதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 34-36 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 20-21 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 90 % ஆகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20-40 % ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 4-6 கி.மீ வரை வட மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் மார்ச் 19 முதல் 25 மார்ச் வரை இயல்பை விட அதிக மழை மற்றும் இயல்பான வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. காய்கறிப்பயிர்களுக்கு நிலமூடாக்கு அமைக்க வேண்டும். அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்களை முன்கூட்டியே அறுவடை செய்ய வேண்டும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் லேசான மழை மற்றும் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து நீர் பாய்ச்ச வேண்டும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | நெல் வயல்களில் 1% பிபிஎப்எம் தெளிக்க வேண்டும். மேலும் நைட்ரஜனை நிலைப்படுத்துவதற்கு அசோலா இட வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி 2.5 கிலோ / எக்டர் இட வேண்டும் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 5 மி.லி /லிட்டர் ஊற்ற வேண்டும். வாழையில் நுண்ணூட்ட சத்துக்களின் குறைபாட்டை நிவர்த்தி செய்ய மற்றும் பழத்தின் தரத்தை உயர்த்த, வாழை நட்ட 3,5 மற்றும் 7 மாதங்களில் நுண்ணூட்ட கரைசலை இலைமீது தெளிக்க வேண்டும். |
| தென்னை | கோடைக்காலங்களில் 1.8 மீட்டர் ஆரம் கொண்ட வட்டப்பாத்திகளில் குவிவட்டப்பகுதி மேல் நோக்கியவாறு 100 தென்னை மட்டைகளை அல்லது 15 காய்ந்த தென்னை ஓலைகளை அல்லது 10 செ.மீ உயரத்திற்கு தென்னை நார்க்கழிவு பரப்பி மண் நீர் வளத்தைப் பாதுகாக்கலாம். தேங்காய் மட்டைகளை குழிந்த பகுதி மேல் நோக்கிய வண்ணம் வட்டப்பாத்தகளிலோ அல்லது இரு தென்னை வரிசைகளுக்கு இடைவெளிகளிலோ புதைத்து வறட்சிகளைத் தாங்க ஏற்பாடு செய்யலாம். |
| மிளகாய் | தற்பொழுது நிலவும் சூழ்நிலை காரணமாக மிளகாய் செடியில் இலைப்பேன் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதன் அறிகுறியாக பூச்சி தாக்கப்பட்ட இலைகளில் சுருக்கங்கள் ஏற்பட்டு இலைகள் மேல்நோக்கி சுருண்டு காணப்படும். எனவே இதனை கட்டுப்படுத்த பைப்ரினில் 1.5 மி.லி/ லிட்டர் தெளிக்க வேண்டும். |
| தக்காளி | தக்காளியில் நுண்ணூட்டசத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இலைவழியாக துத்தநாக சல்பேட்0.5% (5 கிராம் / லிட்டர் ) கரைசலை நட்ட 40 நாள் கழித்து 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும். இலைவழியாக நீரில் கரையக்கூடிய 19:19:19 மற்றும் மாங்கனீசு 0.1% (1கிராம் / லிட்டர் ) கரைசலை 60 நாட்கள் கழித்து தெளிக்க வேண்டும்.இலைவழியாக போரிக் அமிலம் 0.3% (3 கிராம் / லிட்டர்) கரைசலை பூ பூக்கும் மற்றும் 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். |
| மாம்பழம் | என்.ஏ.ஏ என்ற வளர்ச்சி ஊக்கி மருந்தை 20 பி.பி.எம் என்ற அளவில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால் மாவில் பிஞ்சுகள் உதிர்வது தடுக்கப்பட்டு காய்ப்பிடிப்பு அதிகரிக்கும்.பிப்ரவரி மாதத்தில் பூ பூக்காத |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | மரங்களுக்கு 0.5% யூரியா கரைசல் (5கி/ லிட்டர் ) அல்லது 1% பொட்டாசியம் நைட்ரேட் (10 கி / லிட்டர் ) கரைசல் தெளிக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கறவை பசுக்கள், சினைப்பசுக்கள், 5 மாதத்திற்கு மேல் வயதுள்ள கன்றுகள், கிடேரிகள், காளைகள், உழவு மாடுகள், வண்டிமாடுகள் அனைத்திற்கும் கோமாரி நோய்தடுப்பூசி அரசு கால்நடை மருந்தகங்கள் மூலம் போடவேண்டும். |
| வெள்ளாடு | ஆடு, வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு முதலில் குடற்புழு நீக்க மருந்தும் 10 நாட்கள் சென்ற பிறகு காணை என்ற கோமாரி நோய்க்கான தடுப்பூசியும் தங்களது பகுதியில் உள்ள கால்நடை மருந்தகங்கள் மூலமோ அல்லது உங்கள் ஊரில் நடைபெறும் தடுப்பூசி முகாமில் கலந்து கொண்டோ போடவேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | நாட்டு கோழி குஞ்சுகளுக்கு பெரிய கோழி குஞ்சுகளுக்கு தடுப்பூசி போடவேண்டும். 7 நாள் வயதுள்ள கோழிக்குஞ்சுகளுக்கு F ஸ் ட்ரெயின் தடுப்பு மருந்தும், 14 நாள் வயதுள்ள கோழிகுஞ்சுகளுக்கு ஐ பி டி தடுப்பு மருந்தும், 21 நாள் வயதுள்ள கோழிகுஞ்சுகளுக்கு லசோட்டா என்ற மருந்தும் கண் வழியே ஒரு சொட்டும் மற்றும் மூக்கு வழியே ஒரு சொட்டும் விட வேண்டும். மருந்து குளிர்ச்சியாக பனிக்கட்டியில் வைத்திருந்து குளிர்ச்சியாக உள்ளவாறு சொட்டு மருந்து விட வேண்டும். |